செய்தி வெளியீடு எண்: 679 நாள்:03.09.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்தில் 03.09.2021–அன்று பொதுவிநியோகத் திட்டப் பணிகளை சிறப்பாக நடைமுறைப்படுத்த நியாயவிலைக்கடை பணியாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்பில் கூட்டுறவு சங்கங்களின் மாநிலப்பதிவாளர் திரு.ஆ.சண்முகசுந்தரம் இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள் விழாவில் உரையாற்றிய போது விற்பனையாளர்கள் பொதுமக்களிடம் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்கள். மேலும், விற்பனையாளர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றியும் எடுத்துரைத்தார்கள் கொரோனா காலத்தில் அரசின் நலத்திட்டங்களை சிறப்பாக பொது மக்களிடம் எடுத்து சென்றமைக்காக அரசின் சார்பில் பாராட்டுதல்களை தெரிவித்தார்கள்.

இப்பயிற்சி வகுப்பில் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் கூடுதல்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் அவர்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சி குறித்து விளக்கமளித்தனர். மேலும், இப்பயிற்சி வகுப்பில் சென்னை மண்டல பொதுவிநியோகத் திட்டம் 1 மற்றும் 2 இணைப்பதிவாளர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி வகுப்பில் பயிற்சியாளர்களுக்கு பொதுவிநியோகத் திட்ட நடைமுறைகள் குறித்து சிறப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டது (யோகா, சித்தமருத்துவம் மற்றும் மன அழுத்தம்) இப்பயிற்சி நிறைவில் சென்னை கூட்டுறவு மேலாண்மை நிலைய முதல்வர் நன்றி தெரிவித்தார்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**